## அன்னைதெரசா அரசு பெண்கள் மேனிலைப் பள்ளி

ஏல அறிவிப்பு

காரைக்கால், அன்னை தெரசா அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி முதல்வர் அலுவலகத்திலுள்ள தினசரி நாளிதழ்கள் மற்றும் அதனுடைய இணைப்பிதழ்கள், மாணவர்களின் விடைத்தாள்கள் அனைத்தும் ஏலத்தில் எடுத்துக் கொள்வதற்கான ஏலப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஏலதாரர்கள், ஏலப்புள்ளிகளைக் கீழ்க்கண்டவாறு கிலோ ஒன்றின் விலையைத் தனித்தனியே குறிப்பிட வேண்டும்.

| | | ஒரு கிலோவிற்கான விலை ரூ. பை. |
|---|---|---|
| (1) | தினசரி நாளிதழ் (தமிழ்) | . . |
| (2) | தினசரி-இணைப்பு இதழ் | . . |
| (3) | தினசரி நாளிதழ் (ஆங்கிலம்) | . . |
| (4) | மாணவர்களின் விடைத்தாள் | . . |
| (5) | அட்டைப் பெட்டிகள் (பிரிட்டானியா பிஸ்கட்). | . . |

3. ஏலப்புள்ளிகள் முத்திரையிடப்பட்டு "பழைய செய்தித்தாள்கள் வாங்கிக் கொள்வதற்கான ஏலப்புள்ளிகள்" என உறையின் மேல் குறிப்பிட்டு எதிர்வரும் 16-9-2009 அன்று காலை 10.00 மணிக்குள் கீழே கையொப்பமிட்ட அலுவலரின் அலுவலகத்திற்கு வந்தடைய வேண்டும். ஏலப்புள்ளிகள் அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு வந்திருக்கும் ஏலதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

4. ஏலதாரர்கள் காப்புத்தொகையாக ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) அலுவலக காசாளரிடம் முன் பணமாகக் கட்ட வேண்டும்.

5. வெற்றிபெறாத ஏலதாரர்களின் காப்புத்தொகை ஏலம் முடிந்தவுடன், ஏலதாரரிடம் திருப்பித்தரப்படும்.

6. ஏலதாரர்கள் ஏலப்பொருட்களை அலுவலக/ பள்ளி நாட்களில்/நேரங்களில் பார்வையிடலாம்.

7. வெற்றிபெற்ற ஏலதாரர் அன்றைய தினமே முழுத்தொகையையும் உடனே செலுத்தி அவரது சொந்த பொறுப்பில் ஏலப் பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

8. ஏலம் முடிந்தவுடன் ஏலப்பொருட்களின் தரம், எடையினைப் பற்றி இப்பள்ளி பொறுப்பேற்காது.

9. ஏலத்தை தள்ளிவைக்கவோ, நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலருக்கு முழு உரிமையுண்டு.

10. இது தொடர்பாக இப்பள்ளியின் முதல்வர் அவர்களின் முடிவே இறுதியானது.

*காரைக்கால், 2009 ௵ ஆகஸ்ட் மீ 11 ௨.*

**அ. தீபநாதன்,**
முதல்வர்.

## புதுச்சேரி நகராட்சி

## ஆபத்தான நிறுவனங்கள்

அறிவிப்பு

கீழ்க்குறிப்பிட்ட நபர்கள் புதுச்சேரி நகராட்சி எல்லைக்குள் பின்வரும் தொழில் நிறுவனங்களை அமைத்துக்கொள்ள இந்நகராட்சியின் உத்தரவு வேண்டுகிறார்கள்.

| வரிசை எண் | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி | நிறுவனம் அமைய உள்ள இடத்தின் முகவரி | உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனத் தயாரிப்பு/ செய்முறை | தேவையான மின் திறன் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | திரு பி. தனசேகரன், எண் 48, திருவள்ளுவர் சாலை, பிள்ளைத்தோட்டம், புதுச்சேரி-13. | M/s. ஸ்ரீ பாலாஜி ரிபோர் ஒர்க், மறு அளவை எண் 65/6, எண் 48, திருவள்ளுவர் சாலை, பிள்ளைத்தோட்டம், புதுச்சேரி-13. | ரிபோர் ஒர்க், வெல்டிங், டர்னிங், லேத் ஒர்க். | 4.75 குதிரைத் திறன். |
| 2 | திரு வி. ராமு, எண் 5, ஸ்ரீனிவாச நகர், கோட்டைமேடு, அரியாங்குப்பம், புதுச்சேரி-7. | M/s. புதுச்சேரி காயர் ப்ராடக்ட்ஸ் லேபரர்ஸ் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி (லிட்) P. 776, மறு அளவை எண் 119/2, நகர அளவை எண் 34/1, பிளாக் எண் 16, முருங்கப்பாக்கம், புதுச்சேரி-4. | காயர் பைபர் உற்பத்தி செய்தல். | 40 குதிரைத் திறன். |

1973-ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் மூலமாய் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் அமுலாக்கப்பட்ட புதுச்சேரி நகராட்சிகள் (உரிமம் மற்றும் அனுமதி அளித்தல்) விதிகள், 1976, பிரிவு 8-ன்படி, இத்தொழில் நிறுவனங்களை நிறுவுவதினால் உண்டாகும் ஆட்சேபணைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் புதுச்சேரி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பிட்ட காலவரையறைக்குள் பெறப்பட்ட ஆட்சேபணைகள் புதுச்சேரி நகரமன்றத் தலைவி அவர்களால் பரிசீலனை செய்யப்படும்.

*புதுச்சேரி, 2009 ஆகஸ்ட் 7 உ.*

**ஆணையர்.**

---

## PUDUCHERRY MUNICIPALITY

*Puducherry, the 7th August 2009.*

### Dangerous Establishments

NOTICE

The undermentioned persons have requested for permission to set up the following industries within the Puducherry Municipal limits, as detailed below.

| Sl. No. (1) | Name and address of the applicant (2) | Address of the industry site (3) | Industry proposed (4) | Power required (5) |
|---|---|---|---|---|
| 1 | Thiru P. Dhanasekaran, No. 48, Thiruvalluvar Salai, Pillaithottam, Puducherry-13. | M/s. Shree Balaji Rebore Work, Re-survey No. 65/6, No. 48, Thiruvalluvar Salai, Pillaithottam, Puducherry-13. | Rebore work, welding, turning and lathe work. | 4.75 H.P. |
| 2 | Thiru V. Ramu, No. 5, Srinivasa Nagar, Kottaimedu, Ariyankuppam, Puducherry-7. | M/s. Puducherry Coir Products Labourers Co-op. Society (Ltd.) P. 776, Re-survey No. 119/2, Town Survey No. 34/1, Block No. 16, Murungapakkam, Puducherry-4. | Manufacture of coir fibre. | 40 H.P. |

In conformity with rule 8 of the Pondicherry Municipalities (Grant of Licences and Permissions) Rules, 1976 promulgated in this Union Territory by the Pondicherry Municipalities Act, 1973, objections, if any to the setting up of the above industries, are invited to reach the Commissioner within ten days from the date of publication.

The objections so received within the specified time will be considered by the Chairperson of Puducherry Municipality.

**COMMISSIONER.**

---

## உழவர்கரை நகராட்சி

### ஆபத்தான நிறுவனங்கள்

அறிவிப்பு

உழவர்கரை நகராட்சியின் எல்லைக்குள் குடியிருப்பவர்களுக்கு இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவர் பின்வரும் தொழில் நிறுவனத்தை உழவர்கரை நகராட்சியின் எல்லைக்குள் அமைத்துக்கொள்ள இந்நகராட்சியின் ஒப்புதல் வேண்டுகிறார்.

| வரிசை எண் | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி | நிறுவனம் அமைய உள்ள இடத்தின் முகவரி | உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனத் தயாரிப்பு/ செய்முறை | தேவையான மின் திறன் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | திருமதி R. கயல் விழி, எண் 14, எஸ்.எம்.வி. புரம் (கிழக்கு) வில்லியனூார், புதுச்சேரி-10. | M/s. சாஸ்தா பேக்கேஜிங்ஸ், மறு அளவை எண் 160/4, கொஞ்சும் கிளி மாரியம்மன் வடக்கு வீதி, மேட்டுப்பாளையம் (பை பாஸ் ரோடு), புதுச்சேரி. | ஒட்டும் பசை நாடா தயாரித்தல், | 20 குதிரைத் திறன். |

1973-ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் மூலமாய் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் அமுலாக்கப்பட்ட புதுச்சேரி நகராட்சிகள் (உரிமம் மற்றும் அனுமதி அளித்தல்) விதிகள், 1976, பிரிவு 8-ன்படி இத்தொழில் நிறுவனத்தை நிறுவுவதினால் உண்டாகும் ஆட்சேபணைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் உழவர்கரை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எழுத்து மூலமாய் தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பிட்ட காலவரையறைக்குள் பெறப்பட்ட ஆட்சேபணைகள் உழவர்கரை நகராட்சியால் பரிசீலிக்கப்படும்.

*ஜவகர் நகர், 2009 ஆகஸ்ட் 11 ம் நாள்.*

**S. ராஜமாணிக்கம்,**
ஆணையர்.

---

**OULGARET MUNICIPALITY**

*Jawahar Nagar, the 11th August 2009.*

**Dangerous Establishments**

NOTICE

Notice is hereby given to the inhabitants of Oulgaret Municipality that the undermentioned person has requested permission from this Municipality to set up the following industry in the place shown against his name in column (3) within this Municipal limit.

| Sl. No. | Name and address of the applicant | Address of the industry site | Setting up of industry for manufacturing/processing | Power required |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | Tmt. R. Kayal Vizhi, No. 14, S.M.V. Puram (East), Villianur, Puducherry-10. | M/s. Sastha Packagings, Re-survey No. 160/4, Konjumkili Mariamman North Street, Mettupalayam (Bye-pass Road), Puducherry. | Manufacturing of Self-adhesive tape | 20 H. P. |

In conformity with rule 8 of the Pondicherry Municipalities (Grant of Licences and Permissions) Rules, 1976, promulgated in this Union Territory by the Pondicherry Municipalities Act, 1973, objections, if any, to the setting up of the above industry, are invited to reach the Commissioner, Oulgaret Municipality within ten days from the date of publication of this notice in the official gazette.

The objections so received within the specified time will be considered by the Oulgaret Municipality.

S. RAJAMANICKAM,
Commissioner.